# அஞ்சனா தேவிமைந்தன்.



அஞ்சனா தேவியின் மைந்தனவன் ,

அஞ்சாமல் செயல்பல முடிப்பானவன் !

அஞ்சனாதேவி......

பீமனின் சோதரனாய் பிறந்தவனவன் ,

வாமன உருதனையும் எடுப்பானவன் - இராமன்;

நாமத்தை எப்போதும் சொல்பவனவன் ,

நாமக்கல்லில் இருந்தே வளர்வானவன் !

அஞ்சனாதேவி......

சஞ்சீவி பர்வதம் கொணர்ந்தவனவன் ,

சிரஞ்சீவியாய் என்றும் இருப்பானவன் - மிகவும்;

வசீகரத் தோற்றத்தை கொண்வனவன் ,

சுசீந்திரத்தில் இன்று உறைவானவன் !

அஞ்சனாதேவி.......

நங்கையைத் தேடிச் சென்றவனவன் ,

லங்கையை தீயிட்டு அழித்தானவன் - என்றும்;

தன்கை பலத்தையே நம்பியவனவன் -,

நங்கை நல்லூரில் வந்து நின்றானவன் !

அஞ்சனாதேவி...........